# இராசரட்டை நாகரிகம்



Start Your Learning Journey with e-thaksalawa


The National e-learning Portal for The General Education

தேர்ச்சி :- 5.0 இலங்கை நாகரிகத்தின் வரலாற்று வளர்ச்சிப் போக்குகள் தொடர்பான விளக்கம்

தேர்ச்சி மட்டம் 5.2 :- இராசரட்டை நாகரிகத்தின் அரசியல் பொருளாதாரம் சமூகம், கலாச்சாரம், தொழினுட்பம் என்பவற்றை விளங்கல்

1) தேவநம்பிய தீசனின் ஆட்சிக்காலத்து அரசியல், பண்பாட்டு முக்கியத்துவத்தை நுணுக்கமாகப் பரிசீலனை செய்க?

இலங்கை வரலாற்றில் தேவநம்பிய தீசனின் ஆட்சிக்காலம் முக்கிய இடத்தை வகிக்கறது. மௌரியர்களுடன் தொடர்பை மேற்கொண்டு அரசியல், கலாசார விடயங்களை இலங்கையில் மேன்மையடையச் செய்துள்ளான் என்பதை வரலாற்று நூல்கள் தெரிவிக்கின்றன.



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு : திரு.த.சுரேன், ஆசிரியர் (வரலாறு ) (யா/கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி)

கணினி வடிவமைப்பு : செல்வி.மு.தர்மிலா, ஆசிரியர், (த,தொ,தொ) (யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம் )

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## அரசியல்

1. அசோகப் பேரரசின் தொடர்பினால் மௌரிய அரசாட்சிமுறை தோன்றியமை
2. மௌலியப் பேரரசிற்கு இலங்கையிலிருந்து தூதுவர்களை அனுப்பியமை, அங்கு அவர்கள் பயிற்சி பெற்றமை.
3. இலங்கை மன்னர்கள் தேவநம்பிய என்ற பட்டப்பெயரினைச் சூடிக் கொண்டமை
4. அசோகன், தீசன் நட்பினால் இலங்கை அரசாட்சி உறுதியடைந்தமை.





Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## கலாச்சாரம்



01 மகிந்ததேரர் உட்பட்ட குழுவினரின் வருகையால் இலங்கையில் பௌத்தசமயம் பரவியமை



02 தந்ததாது, வெள்ளரசு மரக்கிளை நடப்பட்டமை

03 பிக்கு. பிக்குணி சங்கங்கள் தோன்றியமை







Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## மொழி வளர்ச்சி

1. கலை, இலக்கியம், கட்டிடக்கலையில் ஏற்பட்ட வளர்ச்சி
2. ஐந்து ஒழுக்கங்களை அடிப்படையாகக் கொண்ட சமூகத்தினரின் தோற்றம்.



இலங்கை வரலாற்றில் பெரும் மாறுதல் ஒன்றை உருவாக்கிய மன்னனாகத் தேவநம்பியதீசன் கொள்ளப்படுகின்றான். இவன் காலத்தில் மௌரியப் பேரரசுடன் கொண்டிருந்த தொடர்பால் பௌத்தம் இலங்கையில் அறிமுகமானதுடன் மற்றும் பரவியது போன்ற காரணங்களால் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றான். இவ்வாறு இலங்கையின் வரலாற்றை மாற்றியமைத்த காலமாகக் கொள்ளப்படும் தேவநம்பியதீசன் காலம் பற்றி இப்பகுதியில் ஆராயலாம்.



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk




Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தேவநம்பியதீசன் அக்காலகட்டத்தில் இந்தியாவில் முதன்மை பெற்றுத் திகழ்ந்த மௌரியப் பேரரசுடன் வலுவான தொடர்பினைப் பேணியிருந்தான். குறிப்பாக அசோக மன்னனின் நட்புறவைப் பேணியதால் அசோகப் பேரரசில் நிலவிய நடைமுறைகள் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டது. அசோகனுடன் நேரடியான உறவுகளை தேவநம்பிய தீசன் கொண்டிருக்காத போதிலும் தூதுத் தொடர்புகள் காரணமாக சிறந்த நட்புறவொன்று உருவாகியது. இந் நட்புணர்வு காரணமாக மௌரிய அரசின்

அசோகன் கலிங்கப் போரில் வெற்றி பெற்று முடி சூட்டும் சந்தர்ப்பத்தில் இலங்கை அரசனுக்கு அழைப்பிதழ்களை அனுப்பி இருந்தான். இவ் அழைப்புக் காரணமாக தேவநம்பிய தீசன் தன்னுடைய மருமகனான அரிட்டன் என்பவரின் துணையுடன் தூதுக் குழுவொன்றை மௌரியப் பேரரசுக்கு அனுப்பியிருந்தான். இத் தூதுக்குழு கொண்டு சென்ற பெறுமதியான பொருட்களால் மனமகிழ்வடைந்த அசோகன் அவர்களைச் சிறப்பாகக் கௌரவித்து அனுப்பினான். இதனால் மனம் மகிழந்த அக் குழுவினர் மௌரிய முறையில் இலங்கை மன்னனுக்கு முடி சூட்ட வேண்டும் என்ற விருப்பத்தை





# மௌரிய பேரரசு(அசோகர்)



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



இவ் விருப்பதை ஏற்றுக் கொண்ட அசோகன் முடி சூட்டத் தேவைப்படும் பொருட்களான ஆலவட்டம், நெற்றிப்பட்டம், பாதணி, மங்கலவாள், சாமரை (பஞ்சவஸ்து) போன்றவற்றைக் கொடுத்து அனுப்பியதுடன் தான் பயன்படுத்தும் பட்டமான தேவநம்பிய (கடவுளுக்கு பிரியமான) என்பதையும் கொடுத்து அனுப்பினான். இவற்றினால் இலங்கை - இந்திய உறவு பலப்பட்டது.



இவ்வாறு கிடைக்கப் பெற்ற பொருட்களைக் கொண்டு தேவநம்பிய தீசன் இரண்டாவது முறை முடிசூடிக் கொண்டதால் இலங்கையில் மௌரிய வம்சம் ஆரம்பமானது. முறைப்படி முடிசூடிக் கொள்ளும் வழக்கமும் ஆரம்பமானது. இதனால் இலங்கை அரசியல் முறை சீர்படுத்தப்பட்டது.



தேவநம்பிய தீசன் - அசோகன் நட்புறவின் காரணமாக இலங்கையில் பௌத்தம் பரவும் வழி ஏற்பட்டது. உண்மையில் அசோகன் கலிங்கப் போரின் விளைவால் பௌத்தத்தைத் தழுவியதை அடுத்து மூன்றாம் பௌத்த பேரவை கூட்டப்பட்டது. இதில் அருகிலிருக்கும் நாடுகளுக்கு பௌத்த சமயத்தைப் பரப்பும் தீர்மானம் உருவாக்கப்பட்டது. இதனடிப்படையில் இலங்கைக்கும் தூதுக் குழு அனுப்பத் தீர்மானிக்கப்பட்டது.

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



இந்த வகையில் இலங்கைக்கு மகிந்ததேரர் உள்ளிட்ட குழுவினர் அனுப்பப்பட்டனர். உண்மையில் அசோகன் இலங்கையில் பௌத்தம் பரப்பப்பட வேண்டுமென்பதில் கூடிய கவனம் கொண்டிருந்தான் என்பது, மகிந்ததேரரை அனுப்பியதிலிருந்து வெளிப்படுகின்றது. ஏனெனில் தனது மகன்களில் ஒருவரான மகிந்ததேரரை இங்கு அனுப்பியமையைக் குறிப்பிட முடியும்.



மகிந்ததேரர் - தேவநம்பிய தீசன் ஆளும் காலத்தில் இலங்கைக்கு வந்து தேவநம்பிய தீசன் உதவியுடன் இலங்கைக்குப் பௌத்தசமயத்தை அறிமுகம் செய்தான். இவ்வாறு அறிமுகம் செய்து பௌத்தம் பரவுவதற்கும், பௌத்த கலாசாரம் இலங்கையில் வேரூன்றுவதற்கும் தேவநம்பியதீசனே பொறுப்பாக இருந்தான். இதன் பின் இலங்கையில் கலாசார மறுமலர்ச்சி ஏற்பட்டது. குறிப்பாக வணக்க வழிபாட்டு முறைகளிலும், வாழ்வியல் முறைகளிலும் பெரும் மாற்றம் ஏற்படலாயின.

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

இது மாத்திரமின்றி இவன் காலத்தில் முதல் தூபி நிர்மாணிக்கப்பட்டது. தூபராம தூபி நிர்மானிக்கப்பட்ட போது அதனுள் வைப்பதற்காக புத்தரின் வலது தாடை எலும்பு கொண்டு வரப்பட்டமை காரணமாக புனிதப் பொருட்கள் இலங்கைக்கு வந்தடையும் நிலை உருவாக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக இலங்கைப் பெண்களைப் பிக்குணிகளாக மாற்றுவதற்காகப் பிக்குணி சங்கத்தை ஆரம்பிக்கும் நோக்கில் மகிந்ததேரர் தனது தங்கையாகிய சங்கமித்தாவை இலங்கைக்கு வரவழைத்தார்.

இவ்வாறு சங்கமித்தை வரும் போது புத்த பெருமான் ஞானம் பெற உதவிய வெள்ளரசு மரத்தின் கிளை-யொன்றைக் கொண்டு வந்தார். இக்கிளை ஜம்புகோளப்பட்டினத்தை வந்தடைந்த சந்தர்ப்பத்தில் மிகுந்த மரியாதையுடன் அதனைத் தேவநம்பியதீசன் கொண்டு வந்தார். (இவ்வருகை துமிந்த வருகை என அழைக்கப்படுகிறது) இவ்வாறு கொண்டு வரப்பட்ட வெள்ளரசு மரக்கிளை அநுராதபுரத்தின் மகாவிகாரை எல்லையில் நாட்டப்பட்டது.







Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## உத்திய, மகாசிவ, சூரதிஸ்ஸ மன்னர்கள்

- ♣ தேவநம்பிய தீசனுக்கு பின் உத்திய மன்னன் ஆட்சி செய்தான்
- ♣ சூரதிஸ்ஸ மன்னனது காலத்தில் சேன, குத்திக ஆக்கிரமிப்பு
- ♣ அசேல மன்னனால் நாடு மீட்கப்படலும். எல்லாளனால் ஆக்கிரமிக்கப்பட்டு அவன் அரசனாதலும்.

## எல்லாள மன்னன்



- ♣ அநுராதபுரத்தை ஆக்கிரமித்து அரச அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளுதலும், 44 ஆண்டுகள் ஆட்சி புரிதலும்
- ♣ சட்டத்தைப் பேணி நியாயமான மக்கள் விருப்புடன் கூடிய ஆட்சியாளனாயிருத்தல்
- ♣ எல்லாள மன்னனுக்குச் சமகாலத்தில் உருகுணையில் காவந்ததிஸ்ஸ மன்னனுடைய ஆட்சி பரவலடைதல்.






Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

மதிப்பீட்டு வினா

துட்டகாமினி மன்னனின் அரசியல் சேவைகளை நுணுகி ஆராய்க?

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

தொகுப்பு : திரு.த.சுரேன், ஆசிரியர் (வரலாறு ) (யா/கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி)
கணினி வடிவமைப்பு : செல்வி.மு.தர்மிலா, ஆசிரியர், (த,தொ,தொ) (யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம் )

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk